# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.32/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | மதம் | : இந்து |
| த/பெ | : பங்காரய்யா | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : ஜாகிர்மங்கலம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.02.2025**

**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் ஜாகிர்மங்கலம் என்றால் சரிதான். நான் தற்போது எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் அதே ஊர்தான். ஜாகிர்மங்கலத்தில் நான் வசிப்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதற்காக வந்துள்ளேன் என்றால் மனை தகராறுக்காக வந்துள்ளேன். எந்த மனை தகராறு என்றால் புல எண்.156/1 ஒரு மனை, 156/2 ஒரு மனை. ஒரு மனையில் 20 மாடுகள் கட்டியுள்ளார்கள். ஒரு மனை காலியாக உள்ளது. மாடு எதில் கட்டியுள்ளார்கள் என்றால் 2 வது மனையில் கட்டியுள்ளார்கள். அந்த சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. பள்ளிக்கட்டிடம் எந்த புல எண்ணில் உள்ளது என்றால் 156/1 ல் உள்ளது.

2. கிராம நிர்வாக அலுவலகம் எங்கு உள்ளது என்றால் பள்ளிக்கு அருகிலேயே உள்ளது. பள்ளியும் கிராம நிர்வாக அலுவலக கட்டிடமும் அருகருகே உள்ளதா என்றால் ஆமாம். பள்ளி விளையாட்டு மைதானம் எங்கு உள்ளது என்றால் வெளியே கொடுத்துள்ளார்கள். வெளியே என்பது எங்கே என்றால் புல எண் தெரியாது. இருளர்கள் குடியிருக்கும் பகுதியில் விளையாட்டு மைதானம் உள்ளது. நான் சொல்லும் புல எண்ணில் பள்ளி, கிராம நிர்வாக அலுவலகம் மட்டும்தான் உள்ளதா என்றால் பள்ளி, கிராம நிர்வாக அலுவலகம், கூட்டுறவு சங்கம் மூலமான நியாய விலை

கடை ஆகியவை உள்ளது.

3. மேற்படி கட்டிடங்களை யார் கட்டி கொடுத்தது என்றால் அரசு பஞ்சாயத்து தலைவர் மூலம் கட்டி கொடுத்தது. எனக்கு வாதியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் எனது 15 வயதில் இருந்து தெரியும். 1969ல் வழக்கு சொத்தில் 156/1, 156/2ல் பள்ளி இருந்தது என்றால் ஆமாம். வழக்கு சொத்து ஆதியில் இருந்தே அரசு இடம் என்றாலும் அதில் வாதிக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அரசு இடம் என்றால் இல்லை. அதில் வாதி வேலிகாத்தான் மரம் வைத்துள்ளார். வாதி யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சுப்பிரமணிய ரெட்டியாரிடம் இருந்து வாங்கினார். சுப்பிரமணிய ரெட்டியை எனக்கு தெரியுமா என்றால் அவர் எங்கள் வீட்டில்தான் இருந்தார். அவர் காட்ரேகுண்டாவில் சென்று குடியேறி தங்கிவிட்டார்.

4. நான் வாதிக்காக பொய்யாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் இல்லை. எனக்கு வழக்கு சொத்தில் என்ன என்ன கட்டிடம் உள்ளது என்பதே தெரியவில்லை என்றாலும் வாதி சொல்லியதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை. தற்போதும் நான் வாதியின் வீட்டில் வேலை செய்வதால் வாதிக்காக பொய்யாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தில் அரசாங்க இடம்தான் உள்ளது என்றாலும் வாதிக்கு எந்தவித சம்மந்தமும் அனுபவமும் கிடையாது என்றாலும் வாதிதான் அனுபவித்து வருகிறார். நான் நடுவில் சில நாள் ஊரில் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஊரிலேயேதான் உள்ளேன்.

(மேற்படி குறுக்கு விசாரணை 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

(மறு விசாரணை இல்லை)